1. குமரிக் கடல்முனையையும், வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். (இயல் – 1) [PTA – 1, MDL - 19]

**இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**தலைப்பு – சான்றோர் வளர்த்த தமிழ்**

**அ) முன்னுரை :**

நம் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், பிறருடைய உணர்வுகளை நாம் புரிந்துகொள்ளவும் உதவுவது மொழியே ஆகும். நாகரிகம் வளர வளர, பேச்சு வழக்கு மொழியெல்லாம் எழுத்து வடிவம் பெற்றன. மொழி வளர்ச்சியின் தொடக்கத்தில் அரும்பணி புரிந்த சான்றோர்களின் தமிழ்ப்பணி குறித்து பின்வருமாறு காணலாம்.

**ஆ) பைந்தமிழ்ச் சிறப்பு :**

பண்டைய காலத்தில் வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரிமுனை வரை தமிழ் பரவியிருந்தது. காலங்கள் பல மாறினாலும், கண்டங்கள் பல அழிந்தாலும், அழியாத சிறப்புடைய மொழியாகத் தமிழ்மொழி திகழ்கிறது. செந்தமிழாய், வண்டமிழாய், பைந்தமிழாய் வலம் வரும் ஒரே மொழி தமிழ் மொழியாகும்.

**இ) பிள்ளைத்தமிழுக்குக் குமரகுருபரர் :**

கடவுளரையோ மக்களுள் சிறந்தவரையோ குழந்தையாக எண்ணி, குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் அமையப்பாடுவது பிள்ளைத்தமிழ். பிள்ளைத்தமிழ் நூலில் சிறந்த நூலாகக் கருதப்படுவது குமரகுருபரர் முருகக் கடவுளைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் ஆகும்.

**ஈ) சதகத்திற்கு முன்னோடி மாணிக்கவாசகர் :**

அகப்பொருள் பற்றியோ, புறப்பொருள் பற்றியோ நூறு செய்யுள்களில் உரைப்பது சதகம் எனப்படும். தமிழில் தோன்றிய முதல் சதகம் மாணிக்கவாசகரின் திருச்சதகம் ஆகும்.

**உ) பரணிக்கோர் செயங்கொண்டார் :**

போரிலே ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிபெறும் வீரர்கள்மேல் பாடப்படுவது பரணி இலக்கியமாகும். செயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப்பரணி, பரணி இலக்கியங்களில் சிறப்பானது ஆகும்.

**ஊ) கலம்பகத்திற்கு இரட்டையர்கள் :**

இறைவனையோ, அரசனையோ, தலைவனாகக் கொண்டு பல வகை செய்யுள்களைக் கலந்து பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம் ஆகும். இவை, பலவகைப் பாக்களாலும், பாவகைகளாலும் பாடப்படுகிறது. முதுசூரியர், இளஞ்சூரியர் என்ற இரட்டையர்களால் பாடப்பெற்ற தில்லைக்கலம்பகம் மிகச்சிறப்பானது ஆகும்.

**எ) கோவை, உலா, அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர் :**

கோவை என்பதற்கு முறையாகக் கோர்க்கப்பட்டது என்று பொருள். அகப்பொருளுக்கு உரிய துறைகள் பலவற்றை முறையாகக் கோர்க்கப்பட்டதால் கோவை எனப்பட்டது. உலா என்பது, பாட்டுடைத்தலைவன் உலா வருதலும் அவனைக்கண்டு ஏழு பருவ மகளிர் மனம் மகிழ்தலும் உலா இலக்கியம் ஆகும். ஒரு செய்யுளின் இறுதியில் உள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்து வரும் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது அந்தாதி ஆகும். இம்மூன்று சிற்றிலக்கிய வகைகளைப் பாடுவதில் ஒட்டக்கூத்தர் மிகவும் திறமையானவர் ஆவார்.

**ஏ) முடிவுரை :**

தமிழ் தனித்தியங்கும் இயல்புடையது. காலத்தால் அழியாத கன்னித் தமிழாய் இளமையுடன் திகழக்கூடியது. தமிழின் தொன்மையும் தூய்மையும் வண்மையும் வனப்பும் உலக அளவில் உள்ள அனைவரையும் ஈர்த்துள்ளது. தமிழ் வளர்ச்சிபெற இளைய தலைமுறையினரான நாம் நாளும் சான்றோர் வழி தொண்டாற்றுவோம்!

***தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்!***

**2. 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' (அல்லது) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக. குறிப்புகள்: முன்னுரை - தமிழன் அறிவியலின் முன்னோடி - விண்வெளியும் கல்பனாச் சாவ்லாவும் - விண்ணியல் அறிவில் நமது கடமை - முடிவுரை. (இயல்–4) [AUG – 22, PTA – 4, MDL – 19, SEP – 20]**

**அ) முன்னுரை**

"ஆணுக்குப் பெண் நிகர்" என்ற பாரதியின் வாக்கிற்கு ஏற்ப, உலகில் முதன்முறையாக ஒரு பெண் விண்வெளியில் பயணிப்பது பாராட்டப்பட வேண்டிய சாதனையே. இத்தகு அரும்பெரும் சாதனைபுரிந்த பெண்குலத்தின் பொன்விளக்கு 'கல்பனா சாவ்லா' அவர்களின் விண்வெளி சாதனை பற்றிப் பின்வருமாறு விரிவாகக் காணலாம்.

**ஆ) தமிழன் அறிவியல் முன்னோடி :**

தமிழன் அறிவியல் என்பது பாரம்பரியமாக தமிழர் விருத்திசெய்த, பயன்படுத்திய, அறிவியல் நோக்கில் விளக்கப்படக்கூடிய அறிவையும், தற்காலத்தில் தமிழர் அறிவியலுக்கு வழங்கும் பங்களிப்பையும் குறிக்கும். மொழியியல், மருத்துவம், கட்டிடக்கலை, வேளாண்மை, உயிரியல், கணிதம், வானியல் என பல துறைகளில் தமிழர் அறிவியல் உண்டு. பல்வேறு தொழிநுட்பங்களைக் கொண்டிருந்த தமிழர் அதற்கான அடிப்படை அறிவியலையும் கொண்டிருந்தனர்.

**இ) விண்வெளியும் கல்பனாசாவ்லாவும் :**

* **பிறப்பு:** கல்பனா சாவ்லா 01.07.1961இல் ஹரியானா மாநிலத்தில் கர்னல் என்ற ஊரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் பனாரஸ்லால் சாவ்லா-சன்யோகிதா.
* கல்பனா சாவ்லா 1995இல் நாசா விண்வெளிவீரர் பயிற்சிக்குழுவில் சேர்ந்தார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் "கொலம்பியா விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ்-87"இல் (STS-87) பயணம் செய்வதற்குத் தேர்வு செய்யப்பட்டார்.
* 1997 ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்தப் பயணத்தில், சுமார் 372 மணி நேரம் விண்வெளியில் இருந்து சாதனை புரிந்து வெற்றிகரமாகப் பூமி திரும்பினார். இதன் மூலம் விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப்பெண் என்ற பெருமையும் பெற்றார்.

**ஈ) கொலம்பியா விண்கல நிகழ்வு :**

* 2003-ம் ஆண்டு ஜனவரி 16-ஆம் தேதி விண்வெளி ஆராய்ச்சிக்காக, அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ்-107 அனுப்பி வைக்கப்பட்டது.
* இந்திய வம்சாவளி பெண்ணாகிய கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 பேர் அதில் பயணித்தனர்.
* 16 நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பிய அவர்கள் சென்ற அந்த விண்கலம், அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான்பரப்பில் வெடித்துச் சிதறியது.
* கல்பனா சாவ்லா உள்பட ஏழு விலைமதிப்பற்ற விண்வெளி வீரர்களும் பலியாகினர்.

**உ) விருதுகளும் அங்கீகாரங்களும் :**

* அமெரிக்கக் காங்கிரசின் விண்வெளிப் பதக்கம், நாசாவின் விண்ணோட்ரப் பதக்கம், நாசாவின் சிறப்புமிகு சேவைக்கான பதக்கம் போன்றவை வழங்கப்பட்டன.
* 2001இல் கண்டுபிடிக்கப்பட்ட சிறுகோள் ஒன்றிற்கு கல்பனா சாவ்லாவின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.
* நியூயார்க்கில் உள்ள ஒரு தெருவிற்கு "கல்பனா வே" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**ஊ) விண்ணியல் அறிவில் நமது கடமை :**

* தற்போதைய நவீன காலத்தில் விண்வெளிக்கல்வி என்பது அனைவருக்கும் அவசியமானதாகும்.
* சிறுவயதிலிருந்தே புதியவற்றைக் கண்டுபிடிக்கும் ஆர்வத்தைக் குழந்தைகளிடம் வளர்க்க வேண்டும்.
* மேலும், பள்ளிப்பருவத்தில் விஞ்ஞானிகள் புரிந்த சாதனைகளையும் அவர்களின் தியாகங்களையும் பற்றிக் கூற வேண்டும்.
* மேல்நிலைக்கல்வியில், 'விண்வெளிக்கல்வி' என்ற தனிப்பாடப்பிரிவையே மாணவர்கள் படித்தால் நம் குழந்தைகளும் இளம் விஞ்ஞானிகளாக வளரக்கூடும்.

**எ) முடிவுரை**

'கனவுகளைக் கண்டு அந்தக் கனவுகளை நனவாக்குவதற்கு விடாமுயற்சியோடும், முழுமனதோடும் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்' என்ற உண்மையை உலகிற்கு உணர்த்திச்சென்ற வீரப்பெண்ணை நாமும் போற்றுவோம்.

**தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இலட்சியம் எனும்
விண்ணை எட்டும் ஏவுகணைகள் என்று உணர வைத்தவர் சாவ்லா!**

**3. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக. (அ) நீங்கள் சென்று வந்த அரசுப்பொருட்காட்சியில் அறிவிப்பு, அமைப்பு, சிறு அங்காடிகள், நிகழ்த்தப்பட்ட கலைகள், பேச்சரங்கம், அரசின் நலத்திட்டங்கள் குறித்த விளக்க அரங்குகள் போன்றவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு கட்டுரை ஒன்றை எழுதுக. (அ) குறிப்புகளைக் கொண்டு பொருட்காட்சிக்குச் சென்ற நிகழ்வைக் கட்டுரையாக எழுதுக. முன்னுரை- பொருட்காட்சி வகைகள்- சென்னையில் அரசு பொருட்காட்சி- துறை அரங்குகள்- பொழுதுபோக்கு விற்பனை - பொருட்காட்சியால் விளையும் நன்மைகள் - முடிவுரை. (இயல் – 6) [PTA – 2, 5, AUG – 2022]**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| அ) முன்னுரை |
| ஆ) நுழைவுச்சீட்டு |
| இ) பல்துறை அரங்குகள் |
| ஈ) அங்காடிகள் |
| உ) பொழுதுபோக்கு அம்சங்கள் |
| ஊ) முடிவுரை |

**அ) முன்னுரை**

அரசுப் பொருட்காட்சி என்பது அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் விளக்குவதாக அமைக்கப்படுவதாகும். அவ்வாறே எங்கள் ஊரில் அரசுப்பொருட்காட்சி நடத்தப்படுவதாக அறிவிப்பு செய்யப்பட்டது. எனவே நானும் எங்கள் ஊரில் நேரு திடலில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிக்குக் குடும்பத்துடன் சென்று வந்தோம். அங்கே, நான் கண்டு மகிழ்ந்த நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**ஆ) நுழைவுச்சீட்டு**

பொருட்காட்சியைக் கண்டுகளிக்க நுழைவுக் கட்டணமாகப் பத்து வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 20 ரூபாயும், பத்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 50 ரூபாயும் வசூலித்தார்கள். நுழைவுச்சீட்டைப் பெற்றுக் கொண்டு ஆர்வமாக உள்ளே சென்றோம்.

**இ) பல்துறை அரங்குகள்**

அரசுப் பொருட்காட்சியின் வெளிப்புற அமைப்பு மிகவும் வியக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. அரங்க வாயிலின் முகப்பில் வரவேற்பு வளைவு அழகுற அமைக்கப்பட்டிருந்தது. மாலை நேரமாதலால் பல்வேறு வண்ண விளக்குகளின் ஒளியில் அரங்கம் ஒளிர்ந்தது. “வளர்ச்சி நோக்கித் தமிழ்நாடு” என்ற முகப்பு அறிவிப்பு எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தது. அரசின் ஒவ்வொரு துறையும் தத்தம் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் விதத்தில் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது.

முதலில் நான் நுழைந்தது வேளாண்துறையே! விவசாயத்தில் ஏற்படும் மாற்றங்களும் முன்னேற்றங்களுமான செய்திகள் இருந்தன. இயற்கை உரம் பயன்படுத்துதல், சொட்டுநீர்ப்பாசன முறை, பயிர்ப்பாதுகாப்பு, உற்பத்தியைப் பெருக்கும் வழிகள் போன்ற செயல்பாடுகள் படங்கள் வழியாக, திரையில் விளக்கப்பட்டன. மேலும் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பட்டுப்புழுக்கள் வளர்ப்புத்துறை, குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை போன்ற பல்வேறுபட்ட விளக்க அரங்குகளின் தொழில்நுட்ப முறைகள் நன்கு பயன்படுமாறு அமைந்தன.

**ஈ) அங்காடிகள்**

பொருட்காட்சியில் ஆங்காங்கே சிறு சிறு அங்காடிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் வீட்டுப்பயன்பாட்டு பொருட்கள், நூல்கள், உணவுப்பொருட்கள் ஆகியவை விற்பனை செய்யப்பட்டன. எங்களைப்போல் ஏராளமானோர் குடும்பத்துடன் வந்திருந்தனர். நாங்கள் வீட்டு ஒப்பனைப் பொருட்கள், விருப்பமான நூல்கள் வாங்கினோம் மற்றும் உணவுப் பொருட்களான டெல்லி அப்பளம், மிளகாய் பஜ்ஜி, பனிக்கூழ் ஆகியவற்றை உண்டு மகிழ்ந்தோம்.

**உ) பொழுதுபோக்கு அம்சங்கள்**

நிகழ்கலைகளான பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம், ஒயிலாட்டம் போன்றவை கண்களுக்கு விருந்தாக அமைந்தன. மாலைநேரத்தில் நடத்தப்பட்ட பேச்சரங்கம் தற்கால வாழ்வியல் சிக்கல்களை நகைச்சுவையாய் கூறுவதாக அமைந்திருந்தது. மனதிற்குப் புத்துணர்ச்சி தரும் இராட்டினங்கள், பேய் வீடு, பனி வீடு, முப்பரிமாண திரையரங்கம், மீன் காட்சியகம் போன்ற பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் இருந்தன.

**ஊ) முடிவுரை**

பொருட்காட்சிக்கு என் குடும்பத்தாருடன் சென்று வந்தது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இப்பொருட்காட்சி நிகழ்வுகளை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது.

**4. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.**
**முன்னுரை – அரசுப் பொருட்காட்சி அமைவிடம் - பல்வித அரங்குகள் - நடைபெற்ற நிகழ்ச்சிகள் - அடைந்த உணர்வுகளும் நன்மைகளும் - முடிவுரை.** **[APR – 2023]**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| அ) முன்னுரை |
| ஆ) அரசுப் பொருட்காட்சி அமைவிடம் |
| இ) பல்வித அரங்குகள் |
| ஈ) நடைபெற்ற நிகழ்ச்சிகள் |
| உ) அடைந்தஉணர்வுகளும் நன்மைகளும் |
| ஊ) முடிவுரை |

**அ) முன்னுரை**

உலகில் கண்டு வியக்கத்தக்க பொருட்கள் நாள்தோறும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அவ்வாறு தோன்றும் புதிய பொருட்களைக் காணவும் வாங்கவும் வேண்டுமென்று மக்கள் விரும்புகின்றனர். அரசுப் பொருட்காட்சி என்பது அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் விளக்குவதாக அமைக்கப்படுவதாகும். அத்தகைய பொருட்சாட்சியை, நான் கண்டு மகிழ்ந்த நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**ஆ) அரசுப் பொருட்காட்சி அமைவிடம் :**

எங்கள் ஊரில் சென்றவாரம் அரசுப்பொருட்காட்சி நடத்தப்படுவதாக அறிவிப்பு செய்யப்பட்டது. எனவே நானும் எங்கள் ஊரில் நேரு திடலில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிக்குக் குடும்பத்துடன் சென்றுவந்தோம். பொருட்காட்சியைக் கண்டுகளிக்க நுழைவுக் கட்டணமாகப் பத்து வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 20 ரூபாயும், பத்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 50 ரூபாயும் வசூலித்தார்கள். நுழைவுச்சீட்டைப் பெற்றுக் கொண்டு ஆர்வமாக உள்ளே சென்றோம்.

**இ) பல்வித அரங்குகள் :**

அரசுப் பொருட்காட்சியின் வெளிப்புற அமைப்பு மிகவும் வியக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. அரங்க வாயிலின் முகப்பில் வரவேற்பு வளைவு அழகுற அமைக்கப்பட்டிருந்தது. மாலை நேரமாதலால் பல்வேறு வண்ண விளக்குகளின் ஒளியில் அரங்கம் ஒளிர்ந்தது. “வளர்ச்சி நோக்கித் தமிழ்நாடு” என்ற முகப்பு அறிவிப்பு எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தது. அரசின் ஒவ்வொரு துறையும் தத்தம் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் விதத்தில் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. வேளாண்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பட்டு வளர்ப்புத்துறை, குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை போன்ற பல்வேறுபட்ட விளக்க அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

**ஈ) நடைபெற்ற நிகழ்ச்சிகள் :**

பொருட்காட்சியில் ஆங்காங்கே சிறு சிறு அங்காடிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் வீட்டுப்பயன்பாட்டு பொருட்கள், நூல்கள், உணவுப்பொருட்கள் ஆகியவை விற்பனை செய்யப்பட்டன. எங்களைப்போல் ஏராளமானோர் குடும்பத்துடன் வந்திருந்தனர். நாங்கள் வீட்டு ஒப்பனைப் பொருட்கள், விருப்பமான நூல்கள் வாங்கினோம் மற்றும் உணவுப்பொருட்களான சிறுதானியத்தில் செய்யப்பட்ட கொழுக்கட்டை, பணியாரம், சிறுதானியக்கூழ் ஆகியவற்றை உண்டு மகிழ்ந்தோம்.

நிகழ்கலைகளான பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம், ஒயிலாட்டம் போன்றவை கண்களுக்கு விருந்தாக அமைந்தன. மாலைநேரத்தில் நடத்தப்பட்ட பேச்சரங்கம் தற்கால பிரச்சனைகளை நகைச்சுவையாய் கூறுவதாக அமைந்திருந்தது. மனதிற்குப் புத்துணர்ச்சி தரும் இராட்டினங்கள், பேய் வீடு, பனி வீடு, முப்பரிமாண திரையரங்கம், மீன் காட்சியகம் போன்ற பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் இருந்தன.

**உ) அடைந்த உணர்வுகளும் நன்மைகளும் :**

வேளாண்துறை அரங்குளின் மூலம் விவசாயத்தில் இயற்கை உரம் பயன்படுத்துதல், சொட்டுநீர்ப்பாசன முறை, பயிர்ப்பாதுகாப்பு, உற்பத்தியைப் பெருக்கும் வழிகள் போன்ற செயல்பாடுகள் படங்கள் வழியாக, தொலைக்காட்சியின் மூலம் விளக்கப்பட்டன. இவற்றின் மூலம் இயற்கை விவசாயம் பற்றி அறிந்து கொண்டேன். இதன் மதிப்பை உணர்ந்த நான், என் வீட்டில் தோட்டம் அமைத்து விவசாயம் செய்து மகிழ்ச்சியடைந்தேன். மேலும் பழங்கால கலைகளின் மதிப்பை உணர்ந்தேன்.

**ஊ) முடிவுரை**

பொருட்காட்சிக்கு என் குடும்பத்தாருடன் சென்று வந்தது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இப்பொருட்காட்சி நிகழ்வுகளை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது.

5. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.
முன்னுரை – கொரோனா பெருந்தொற்று – தடுப்பு நடவடிக்கைகள் – விழிப்புணர்வுச் செயல்பாடுகள் – நமது கடமைகள் – முடிவுரை. **[APR - 2023]**

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| அ) முன்னுரை | ஈ) விழிப்புணர்வுச் செயல்பாடுகள் |
| ஆ) கொரோனா பெருந்தொற்று | உ) நமது கடமைகள் |
| இ) தடுப்பு நடவடிக்கைகள் | ஊ) முடிவுரை |

**அ) முன்னுரை**

இன்று உலகையே அச்சுறுத்தும் ஒரு கொடிய நோயாக கொரோனா பெருந்தொற்று உள்ளது. லட்ச கணக்கான உயிர்களை பலி கொண்டு இன்றும் மக்களை அச்சத்தில் வைத்திருக்கின்றது. மருத்துவத் துறையில் பெருவளர்ச்சி கண்ட நாடுகளை கூட ஆட்டம் காண வைத்துள்ளது. கண்ணுக்கு தெரியாத கொரோனா வைரஸின் தோற்றம், பாதிப்பு, தடுப்பு முறை, விழிப்புணர்வு போன்றவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

**ஆ) கொரோனா பெருந்தொற்று :**

கொரோனா வைரஸ், 2019-ல் சீனாவில் இருந்து உலகம் முழுவதும் பரவியதால் கோவிட்-19 என அழைக்கப்படுகிறது. இது மனித உடலில் மூக்கு வழியாக நுழைந்து காய்ச்சல், இருமல், தலைவலி, வாசனை மற்றும் சுவை உணர்வை இழத்தல் போன்ற தொற்று பாதிப்புகளை ஏற்படுத்தியது. மேலும் சுவாச மண்டலத்தை பாதித்து சுவாசிப்பதில் சிரமம், நுரையீரல் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு உள்ளவர்கள், வயதானவர்கள் போன்ற உடல்நல குறைபாடு உள்ளவர்களுக்கு விரைவில் மரணத்தை கூட ஏற்படுத்துகிறது. பெரும்பாலும் அதிக இறப்புகள் ஆக்ஸிஜன் குறைபாட்டால் நிகழ்ந்தது.

இத்தொற்றானது ஒரு மனிதரிடமிருந்து மற்றவர்களுக்கு வேகமாக பரவக்கூடியது. அதனால் குறுகிய காலத்தில் அதிக தொற்று பாதிப்பையும், இறப்பையும் ஏற்படுத்தியது. இந்நோயை கட்டுப்படுத்த முடியாமல் மருத்துவர்கள் கடுமையாக போராடினார்கள்.

**இ) தடுப்பு நடவடிக்கைகள் :**

“வெள்ளம் வரும் முன் அணை கட்ட வேண்டும்” என்பது போல் நோயின் தீவிரம் அதிகரிக்கும் முன்னரே அதை தடுக்க வேண்டும். மருத்துவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, சில தடுப்பு நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- வெளியிடங்களில் ஒன்று கூடுவதை தவிர்த்தல். வெளியில் செல்லும் போது முககவசம் அணிதல்.
- சமூக இடைவெளியை பின்பற்றுதல். கைகளை கிருமிநாசினியை கொண்டு கழுவுதல்.
- உடற்பயிற்சி மற்றும் தியானம் முலம் உடலையும் மனதையும் திடமாக வைத்தல்.
- கொரோனா அறிகுறி தென்பட்டால் சுய தனிமைபடுத்தல் வேண்டும்.
- இருவர் உரையாடும் போது முககவசத்தை கழற்றாமல் குறைந்தது 2 மீட்டர் இடைவெளி விட்டு பேச வேண்டும். அத்தியாவசிய குடும்ப தேவைகளுக்கு மட்டும் வெளியே செல்ல வேண்டும்.

கீழ்க்கண்ட அங்கீகரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகளை பயன்படுத்துவதன் மூலமும் நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

- **கோவிசீல்டு** - (கண்டுபிடிப்பு: இங்கிலாந்தின் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம்)
- **கோவாக்சின்** - (கண்டுபிடிப்பு: பாரத் பயோடெக் நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம்)

**ஈ) விழிப்புணர்வுச் செயல்பாடுகள் :**

மேற்கண்ட தடுப்பு நடவடிக்கைகளுடன் சேர்ந்து மக்கள் விழிப்புணர்வுடன் செயல்படவேண்டும்.

- அரசாங்கமானது ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தது.
- தொலைகாட்சிகள், வானொலிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமூக சேவகர்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.
- மேலும் வீடுவீடாக சென்று இலவசமாக கபசுர குடிநீர் மற்றும் நோய் எதிர்ப்பு மாத்திரைகள் வழங்கப்பட்டது. முககவசம் இலவசமாக வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**உ) நமது கடமைகள் :**

- கொரோனா வைரஸ் தொடர்பான அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றி நடக்க வேண்டும்.
- அவ்வபோது சுகாதாரம் மற்றும் மருத்துவத்துறை வெளியிடும் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும். அனுமதியில்லாமல் வெளியில் நடமாடுவதை தவிர்க்க வேண்டும்.
- கொரோனா காலத்தில் மருத்துவர்கள், செவிலியர்கள், காவல் துறையினர், துப்புறவு பணியாளர்கள் போன்றோர் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் தம் பணியினை சிறப்பாகச் செய்து, தொற்று நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றினர்.

**ஊ) முடிவுரை**

கொரோனா வைரஸ் தொடர்ந்து உருமாற்றம் அடைந்து கொண்டே இருப்பதால், எதிர்காலத்தில் இவ்வைரஸினால் ஏற்படும் பாதிப்புகளையும் எதிர்கொள்ள மக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

6. முன்னுரை - உழவுத்தொழில் - உழவர் - உழவுத்தொழிலின் இன்றியமையாமை - உழவர்களை மதித்தல் - உணவினை வீணாக்காமல் உண்ணுதல் - முடிவுரை (அல்லது) முன்னுரை - உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் - உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் - சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் - முடிவுரை. **இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி, பொருத்தமான தலைப்பிடுக. [SEP – 2021, PTA – 4]**

## தலைப்பு - உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம்

| குறிப்புச்சட்டகம் |
|---|
| அ) முன்னுரை |
| ஆ) உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் |
| இ) உழவுத் தொழிலின் சிறப்புகள் |
| ஈ) உழவர் அச்சாணி போன்றவர் |
| உ) உரிமையோடு வாழ்வர் |
| ஊ) உழவர்களை மதித்தல் |
| எ) உணவினை வீணாக்காமல் உண்ணுதல் |
| ஏ) முடிவுரை |

**அ) முன்னுரை**

மனித வாழ்க்கைக்கு அவசியமாகவும், ஆதாரமாகவும் விளங்குவது உணவு, உடை, நீர் ஆகியனவாகும். மனித உழைப்பின் முக்கியத்துவம் என்பது உணவை அடிப்படையாக கொண்டே அமைகிறது. அந்த உணவையும், அதை விளைவிக்கும் உழவனையும் பற்றி பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது. எனவே அப்படிப்பட்ட உழவையும், உழவர் பண்பாட்டையும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஆ) உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் :**

திருக்குறளில் உழவு என்ற அதிகாரம் 104-வது அதிகாரமாக அமைந்துள்ளது. எருவிடுவான், கலப்பையால் நிலத்தை உழுது பண்படுத்துவான் (சிறுபஞ்சமூலம்.52) உழவனுக்கு எருதுகள் இல்லாமை இன்னா. நிலத்தின் ஈரம் இல்லாமை இன்னா (இன்னாநாற்பது.4). நிலத்தை உழுது விதைத்து நெற்பயிர் விளை (ஆத்திசூடி.82) ஒருவரை வணங்கி வாழ்தலைவிட உழுது விளைத்து வாழ்தல் இனிது. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும். உழவு வழி வரும் செல்வம் குன்றாது (கொன்றை வேந்தன்.77) உழவுப் பணியே சிறந்தது. பிற பணி எல்லாம் பழுதுடையவை (நல்வழி.12) உழவர்க்கு அழகு தானே உழைத்து விளைத்த உணவை உண்ணுதல், உழுதொழிலைச் செய்து உணவு உண்ணாது வறிதே ஏழையாக இருப்போர் பதராவர்.

**இ) உழவுத் தொழிலின் சிறப்புகள் :** உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலைப் பின்பற்றியே நிற்கும். அதனால் எவ்வளவு துன்பமானாலும் உழவே சிறந்த தொழிலாகும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**ஈ) உழவர் அச்சாணி போன்றவர் :** உழவுத்தொழில் செய்பவர் வலிமை இல்லாது, பிற தொழில் செய்கின்றவரையும் தாங்குவதால், உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர் அவர் இதனை,

***உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ்.து ஆற்றாது***
***எழுவாரை எல்லாம் பொறுத்து*** - என்ற குறள் வெளிப்படுத்துகிறது.

**உ) உரிமையோடு வாழ்வர் :** உழவுசெய்து வாழ்பவரே உரிமையோடு வாழ்வார். விளை நிலங்கள் வீடு ஆதல் மற்றவர் பிறரைத் தொழுது அவர் பின் சென்று வாழ்வர்.

**ஊ) உழவர்களை மதித்தல் :** உணவு இல்லையென்றால் மனிதனால் உயிர்வாழ முடியாது. உழவன் 'சேற்றில் கால் வைத்தால்தான், நாம் சோற்றில் கைவைக்க முடியும்'.

***இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது***
***கைசெய்தூண் மாலை யவர்***

தம்மிடம் கேட்டு வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாமல் கொடுக்கும் உழவரை நாம் மதிக்க வேண்டும். உழவர்கள் உழைப்பை நிறுத்தி விட்டால் நம்மால் உண்ண முடியாது என்பதை மனதில் நிறுத்துவோம். உழவர்க்கான மதிப்பு என்பது நாம் உண்ணும் உணவை வீணாக்காமலும், உணவின்றி தவிப்போருக்கு உதவி புரிவதிலும் உள்ளது. எல்லாத் தொழிலையும் விட சிறந்த தொழில் உழவுத் தொழிலே. அத்தொழிலை செய்யும் உழவர்களை மதித்து காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**எ) உணவினை வீணாக்காமல் உண்ணுதல் :**

உலகில் கோடிக்கணக்கான மக்கள் ஊட்டச்சத்து கிடைக்காமலும், பட்டினியாலும் பாதிக்கப்படுகின்றனர். உலகில் எதைக் கொடுத்தாலும், 'இது போதாது... இன்னும் அதிகமாகக் கொடுத்திருக்கலாம்' என்று மனம் சிந்திக்கும். ஆனால், உணவு மட்டும்தான் 'போதும்' என்று சொல்ல வைக்கும். அந்த உணவை வீணாக்க கூடாது. உணவுப் பொருட்களை விவசாயிகள் உற்பத்தி செய்து முடிப்பதற்குள் பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். எனவே உணவை வீணாக்காமல் தேவைக்கேற்ப பயன்படுத்தலாம்.

**ஏ) முடிவுரை**

தமிழகத்தில் இன்றளவும் உழவுத்தொழில் சிறந்ததாகக் காணப்படுகிறது. உழவுத் தொழிலின் மூலம் விளையும் பொருட்களை இன்றளவும் உட்கொண்டு மக்கள் உயிர் வாழ்கின்றனர். உழவர்கள் உழைப்பை நிறுத்தி விட்டால் நம்மால் உண்ண முடியாது என்பதை மனதில் நிறுத்துவோம்.

7. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.** **[PTA - 3, SEP – 2021, MAY - 2022]**

**குறிப்புகள்: முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.**

**தலைப்பு : சாலை பாதுகாப்பு**

**குறிப்புச்சட்டகம்**

அ) முன்னுரை
ஆ) சாலைப் பாதுகாப்பு
இ) சாலை விதிகள்
ஈ) ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்
உ) சாலை விழிப்புணர்வு
ஊ) முடிவுரை

**அ) முன்னுரை**

மனித வாழ்வின் அன்றாடத் தேவைகளுள் முக்கியமானது போக்குவரத்து. சாலைகளில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகிக் கொண்டே வருகின்றன. ஆனால் அந்த அளவுக்குச் சாலைகள் பெருகவில்லை. சிக்கலற்ற பாதுகாப்பான பயணத்திற்கு உதவும் சாலைவிதிகளைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**ஆ) சாலைப் பாதுகாப்பு**

'தலைக்கவசம் உயிர்க்கவசம்' என்ற பொன்மொழிக்கேற்ப, இருசக்கர வாகனங்களில் செல்வோர் கட்டாயம் தலைக்கவசம் அணிந்து செல்லவேண்டும். நான்கு சக்கர வாகனங்களில் செல்வோர் இருக்கைப் பட்டைகளைப் பொருத்திக் கொள்ள வேண்டும்.

*சாலைப் பாதுகாப்பு, உயிர்ப் பாதுகாப்பு!*

**இ) சாலை விதிகள்**

சாலைப் போக்குவரத்தினை முறைப்படுத்தவும் விபத்துகள் இன்றிப் பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளவும் உருவானவைதான் சாலை விதிகள். சாலையில் நடந்து செல்வோரும் வாகனங்களில் செல்வோரும் சாலை விதிகளைப் பின்பற்ற வேண்டும். வாகனங்களில் செல்வோர் போக்குவரத்து விளக்குகளை மதித்துச் செல்ல வேண்டும். சிவப்பு விளக்கு எரிந்தால் உடனே வண்டியை நிறுத்த வேண்டும். மஞ்சள் விளக்கு எரியும் போது புறப்படத் தயாராக வேண்டும். பச்சைவிளக்கு எரியும்போது புறப்பட்டுச் செல்ல வேண்டும். போக்குவரத்துக் காவலர் காட்டும் சைகைகளை அறிந்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

**ஈ) ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்**

வாகன ஓட்டிகள் சட்டப்படி தங்கள் வாகனங்களை முறையாகப் பதிவு செய்யவேண்டும். மேலும், வாகனப்பதிவுச் சான்று, ஓட்டுநர் உரிமம், காப்பீடு போன்ற ஆவணங்களை தன்னுடன் வைத்திருக்க வேண்டும். வாகனங்களில் குறிப்பிட்ட வேகத்தில்தான் செல்லவேண்டும். சில இடங்களில் சாலையின் தன்மை, போக்குவரத்து ஆகியவற்றின் அடிப்படையில் வேகம் வரையறுக்கப்பட்டிருக்கும். அதை மீறி வண்டிகளை ஓட்டக்கூடாது. பெரும்பாலும் விபத்துகள் அதிக வேகத்தாலே ஏற்படுகின்றன. வாகனம் ஓட்டும்பொழுது கைப்பேசியைப் பயன்படுத்தக்கூடாது. மது அருந்திவிட்டு வாகனங்களை ஓட்டக்கூடாது.

*வேகம் விவேகமன்று; மிதவேகம் மிக நன்று!*

**உ) சாலை விழிப்புணர்வு**

பேருந்தில் "படிக்கட்டில் பயணம் நொடிப்பொழுதில் மரணம்" என்பதை இளைஞர்கள் உணர வேண்டும். ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்களுக்கு வழிவிட வேண்டும். தடைசெய்யப்பட்ட பகுதிகளுக்குள் வாகனங்களில் செல்லக்கூடாது. உரிய இடங்களில்தான் வாகனங்களை நிறுத்த வேண்டும். வாகனங்களுக்கு மட்டுமன்று சாலைகளில் நடந்து செல்வோருக்கும் சாலைவிதிகள் பொருந்தும். சாலைகளில் இடப்புறம் உள்ள நடைமேடைகளில்தான் நடந்து செல்ல வேண்டும். சாலையைக் கடப்பதற்கான வெள்ளைக் கோடுகள் போட்ட இடங்களில்தான் கடந்து செல்ல வேண்டும்.

*விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம்!*

**ஊ) முடிவுரை**

சாலைவிதிகளையும் போக்குவரத்துச் சட்டங்களையும் மதிப்போம். விபத்துகளைத் தவிர்ப்போம். சட்டங்கள் நமது பாதுகாப்பிற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. சாலைகளில் பாதுகாப்பாக பயணம் செய்வோம்.

**சாலைப் பாதுகாப்பு! சமூகத்தின் கூட்டுப்பொறுப்பு!**

**8. மனித நேயமிக்க ஆளுமை ஒருவருக்கு குறிப்புகளைப் பயன்படுத்தி நினைவிதழ் ஒன்று உருவாக்குக.**

முன்னுரை – என் இளமைப்பருவம் - விடுதலைப் போராட்டத்தில் நான் - பொது நலமே தன்னலம் - எளிமையே அறம் - நாட்டின் முன்னேற்றமே நோக்கம் - எளியோரின் அன்பே சொத்து – முடிவுரை. **[SEP–2020]**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| அ) முன்னுரை |
| ஆ) காமராசரின் இளமைப் பருவம் |
| இ) விடுதலைப்போராட்டத்தில் காமராஜரின் பங்கு |
| ஈ) பொதுநலமே தன்னலம் |
| உ) எளிமையே அறம் |
| ஊ) நாட்டின் முன்னேற்றமே நோக்கம் |
| எ) எளியோரின் அன்பே சொத்து |
| ஏ) முடிவுரை |

**அ) முன்னுரை**

தாய் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்து நாட்டு மக்களின் நன்மனங்களில் வாழ்வோர் ஏராளம். அத்தகு தியாக சீலர்களுள், எளிய மக்களைக் கவரும் வகையில், எளிய கருத்துகளைக் கூறி மனிதநேயமிக்க தலைவராகத் திகழ்ந்த காமராசர் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஆ) காமராசரின் இளமைப் பருவம் :**

கு. காமராசர் அவர்கள் 1903ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் நாள் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள விருதுநகரில் குமாரசாமி, சிவகாமி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தார். காமராசர் அவர்கள் உயர்நிலைப்பள்ளியில் படித்தபோது, தந்தை இறந்ததால், பள்ளிப்படிப்பைத் தொடர முடியாதநிலை ஏற்பட்டது. எனவே தன்னுடைய மாமாவின் துணிக்கடையில் வேலைக்கு சேர்ந்தார்.

**இ) விடுதலைப்போராட்டத்தில் காமராஜரின் பங்கு :**

டாக்டர் வரதராஜூலு நாயுடு, ஜார்ஜ் ஜோசப் போன்ற தேசத்தலைவர்களின் பேச்சுகளால் கவரப்பட்ட காமராசர் சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். உப்புச் சத்தியாகிரகத்தின் ஒரு பகுதியாக, 1930 ஆம் ஆண்டு சி.ராஜகோபாலச்சாரி தலைமையில் வேதாரண்யத்தை நோக்கி நடந்த திரளணியில் பங்கேற்று கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த அனைத்துப் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றதால், சிறையில் அடைக்கப்பட்டார்.

**ஈ) பொதுநலமே தன்னலம் :**

காமராசர் அவர்கள் பள்ளிக்குழந்தைகள் பயன்பெறும் வகையில் இலவச மதிய உணவுத்திட்டத்தினைக் கொண்டு வந்தார். இதன் விளைவாக ஏழை எளிய மக்களின் கல்வியில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தினார். தனிப்பட்ட தன் நலனைப் பெருக்கிக் கொள்ளாமல், பொது நலனைப் பேணிக்காப்பதில் முனைந்து நின்றவர் பெருந்தலைவர் காமராசர்.

**உ) எளிமையே அறம் :**

காமராசர் எளிமைக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர். ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபொழுதும் இறுதிவரை வாடகை வீட்டிலேயே வாழ்ந்தார். அவருக்காக அவர் சேர்த்து வைத்த சொத்து சில கதர் வேட்டிகள், சட்டைகள், புத்தகங்கள் மற்றும் 150 ரூபாய் மட்டுமே. எளிமையையே அறமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர் பெருந்தலைவர் காமராசர்.

**ஊ) நாட்டின் முன்னேற்றமே நோக்கம் :**

காமராசர் கல்வித்துறை மட்டுமல்லாமல், தொழில்துறை, நீர்ப்பாசனத்திட்டங்கள், மின் திட்டங்கள் போன்றவற்றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார். நெய்வேலி நிலக்கரித் திட்டம், பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை, திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ், கல்பாக்கம் அணு மின் நிலையம் என மேலும் பல தொழிற்சாலைகள் காமராஜரால் உருவாக்கப்பட்டன. காமராசர் ஆட்சியின் இறுதியில் தமிழகம் தொழில் வளத்தில் வடநாட்டு மாநிலங்களைப் பின்னுக்குத் தள்ளி, இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

**எ) எளியோரின் அன்பே சொத்து :**

காமராசர் ஏழை எளிய மக்களின் அன்பையே சொத்தாய் மதித்து வாழ்ந்தவர். அவர் இறந்தபோது பையில் இருந்த சிறிதளவு பணத்தைத்தவிர வேறு வங்கிக் கணக்கோ, சொந்த வீடோ, வேறு எந்தவிதச் சொத்தோ தனக்கென சேர்த்து வைக்காமல் ‘எளியோரின் அன்பே சொத்து’ என்ற கொள்கையின்படி வாழ்ந்தார்.

**ஏ) முடிவுரை**

தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் சமூகத்தொண்டு செய்வதிலேயே அர்ப்பணித்துக் கொண்ட காமராசர் அவர்கள், 1975ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி தன்னுடைய 72ஆம் வயதில் காலமானார். அரசியலில் நேர்மை, வாய்மை, தூய்மை, நாணயம் என அனைத்தையும் கற்பித்த மாமனிதராக மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்தியாவிற்கே வழிகாட்டும் தலைவராகக் காமராசர் விளங்கினார்.

***வறுமையின் பிடியில் வலுவில்லா வறியவர் வாழ்க்கை கல்விக்கு, வித்திட்ட விளைநிலத்தின் வித்தகர் காமராசர்!***

9. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.**

**முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் - நாட்டுப் பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.** **[PTA – 1, MAY – 2022]**

**தலைப்பு : காமராசர் - மக்கள் பணியே மகத்தான பணி**

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| அ) முன்னுரை | உ) பொதுவாழ்வில் தூய்மை |
| ஆ) தமிழகம் தந்த தவப்புதல்வர் | ஊ) எளிமை |
| இ) நாட்டுப்பற்று | எ) மக்கள் பணியே மகத்தான பணி |
| ஈ) மொழிப்பற்று | ஏ) முடிவுரை |

**அ) முன்னுரை**

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும் என்பது அப்துல்கலாம் அவர்களின் பொன்மொழி. இப்பொன்மொழிக்கேற்ப சாதாரணக் குடும்பத்தில் பிறந்து மக்கள் பணியை மகத்தான பணியாகக் கருதி, சரித்திரமாக வாழ்ந்து மறைந்தவர் தமிழகத்தின் தவப்புதல்வர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள். அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஆ) தமிழகம் தந்த தவப்புதல்வர் :**

தன்னலமற்ற தலைவர் கர்மவீரர் கல்விக்கண் திறந்த முதல்வர் ஏழைப்பங்காளர் என்னும் புகழுரைகளுக்கெல்லாம் உரியவர் காமராசர். இவர், விருதுநகரில் குமாரசாமி - சிவகாமி இணையர்க்கு மகனாய் 1903ஆம் ஆண்டு சூலை திங்கள் பதினைந்தாம் நாளன்று தோன்றினார். காமராசர், திண்ணைப் பள்ளியில் தமிழ் எழுத்துகளைக் கற்று, அதன்பிறகு ஓர் ஆண்டு தமிழ்ப்பாடம் கற்றார். பின்னர் கல்வியோடு உணவளிக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிக்குச் சென்று காமராசர் கல்வி கற்றார். அவருக்குப் பன்னிரண்டு வயதிலேயே பள்ளிக்குச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டது.

**இ) நாட்டுப்பற்று :**

காமராசர், தமது ஏழு வயதில் வந்தே மாதரம் என்று சுவரொட்டியில் எழுதப்பட்டிருந்த சொல், அவரது மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. காமராசர் பள்ளி செல்ல இயலாதபோதும் நாள்தோறும் செய்தித்தாள்களைப் படித்தும், அரசியல் கூட்டங்களில் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும், தம்முடைய அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டார். அவர், இளமையில் தேசிய இயக்கமான காங்கிரசில் சேர்ந்து, அதன் தொண்டராகத் தம் அரசியல் வாழ்வினைத் தொடங்கினார் கட்சிக் கூட்டங்களை நடத்தினார் ஊர்வலங்களில் கலந்துகொண்டார் கொடி பிடித்தார் சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் முதலிய போராட்டங்களில் கலந்து கொண்டார், சிறை சென்றார்.

**ஈ) மொழிப்பற்று :**

காமராசர் தன் தாய்மொழியான தமிழ் மீது பற்றுக் கொண்டவராக விளங்கினார். தமிழகத்தின் முதல்வராக பதவியேற்றுக் கொண்ட பின்னர், தமிழில் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தவர் காமராசர். அவரது ஆட்சிக்காலத்தில்தான் கலைச்சொல் அகராதி வெளியிடப்பட்டது. தமிழ் ஆட்சி மொழிச் சட்டம், தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், தமிழ்ப் பாடநூல் வெளியீட்டுக் கழகம் முதலியவற்றைக் கொண்டு வந்தார்.

**உ) பொதுவாழ்வில் தூய்மை :**

காமராசர், தமிழ்நாட்டின் முதல்வராக ஒன்பது ஆண்டுகள் பதவி வகித்தார். ஆயினும் பொதுவாழ்வில் தூய்மையானவராகவே வாழ்ந்தார். அவரது ஆட்சி கையூட்டு, ஊழல் என்ற சொற்களுக்கு இடமளிக்காத வகையில் செயல்பட்டது. பெற்ற தாயைத் தன்னுடைய வீட்டில் வைத்துக் கொண்டால், அதன் காரணமாக உறவினர்கள் வீட்டில் நுழைந்து ஆட்சி அதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தி விடுவார்களோ என்று எண்ணி இறுதி வரை தன் தாயை விருதுநகரிலேயே வசிக்கச் செய்தார்.

**ஊ) எளிமை :**

எளிமை என்ற சொல்லுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர் காமராசர். கதர் ஆடை மட்டுமே அணிந்து வாழ்ந்தவர். உயரிய ஆடை, அணிகலன்களை விரும்பாதவர். தேவையில்லாத இடங்களில் மகிழ்வுந்தினைப் பயன்படுத்த மாட்டார். நடந்தே செல்வார்.

**எ) மக்கள் பணியே மகத்தான பணி :**

திருமணம் செய்து கொள்ளாமல், தனக்கென்று ஒரு குடும்பத்தை உருவாக்கிக் கொள்ளாமல் தமிழ்நாட்டு மக்களையே தன் குடும்பமாக எண்ணி வாழ்ந்தவர் காமராசர். இவரது ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்போது, தமிழகத்தில் பொருளியல் தொழில்துறைத் திட்டங்கள் பல தொடங்கப்பட்டன, சாலைகள் போடப்பட்டன. வேளாண்மைக்கென்று பாசன வசதிகள் செய்யப்பட்டன, அணைகள் கட்டப்பட்டன. இவர் காலத்தில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றியது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை உள்ளிட்ட பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன.

அனைத்துக்கும் மேலாக தமிழ்நாட்டில் கல்விப்புரட்சியை உருவாக்கியவர் காமராசர். இவருடைய காலத்தில் கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. 6000க்கு மேற்பட்ட தொடக்கப் பள்ளிகளைத் திறந்தார். தொடக்கப்பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை உருவாக்கினார்.

**ஏ) முடிவுரை**

படிக்காத மேதையாய் விளங்கி, கல்விக் கண் திறந்தவர் காமராசர். மக்களின் ஊழியனாய் வாழ்ந்தவர் அவர். தமிழகம் தந்த தவப்புதல்வன், மக்கள் பணியே மகத்தான பணி என்று வாழ்ந்து மறைந்தவர் காமராசர். அவர் மறைந்தாலும் அவரின் தியாகம் என்றும் நம் நினைவில் நிலைத்திருக்கும்.

10. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருக. [PTA – 2, 6]

குறிப்புகள் : முன்னுரை – மனித வாழ்வு அறம் சார்ந்தது - இலக்கியம் காட்டும் அறம் - அறத்தான் வருவதே இன்பம் - முடிவுரை.

**தலைப்பு : வாழ்வியலில் அறம்**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| அ) முன்னுரை |
| ஆ) அறம் என்பதே மனிதம் |
| இ) இலக்கியம் காட்டும் அறம் |
| ஈ) அறத்தான் வருவதே இன்பம் |
| உ) முடிவுரை |

**அ) முன்னுரை**

சங்ககாலத்திலிருந்து இன்று வரையிலான தமிழிலக்கியங்கள் அறத்தின் மாட்சிமைகளை மிகச்சிறப்பாக விளக்குகின்றன. தமிழர் தன் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் அறத்தை மையமாகக் கொண்டே வாழ்ந்து வந்தனர். மனித வாழ்வில் நீக்கமற நிறைந்துள்ள அறத்தினைப் பற்றிப் பின்வருமாறு விரிவாகக் காணலாம்.

**ஆ) அறம் என்பதே மனிதம்**

மனிதன் தன் பிறப்புத் தொடங்கி வாழ்க்கை முடியும்வரை அறத்தொடு இயங்குவதாக அமைகிறது. உயிரிரக்கம் என்பதே அறத்தின் மையக்கருவாகும். அறம் என்பது மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் செய்யப்படுவதே ஆகும். 'பிறருக்குத் தீங்கு செய்தல் கூடாது' ' எனப்பல அறநெறிகளை அன்று முதல் இன்று வரை நம் சான்றோர் குறிப்பிட்டு வருகின்றனர். பிறருக்கு உதவுதல், உண்மையே பேசுதல் போன்ற அறங்கள் மனித வாழ்க்கையில் இன்றியமையாத பங்கு வகிக்கின்றன.

**இ) இலக்கியம் காட்டும் அறம்**

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தக் குடியாகக்' கருதப்படும் தமிழரின் வாழ்க்கையைப் பேசுவதாக அற இலக்கியங்கள் அமைந்துள்ளன.

✷ **திருக்குறள் உணர்த்தும் அறம்**

*"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை*
*மறத்தலின் ஊங்கில்லை கேடு"*

**விளக்கம் :** இவ்வுலகில் ஒருவனுக்கு அறம் செய்வதைக் காட்டிலும் மிகுந்த செல்வம் இல்லை. அந்த அறம் செய்தலையே அவன் மறந்து போயின் அதனால் அவனுக்குப் பல துன்பங்கள் வந்து சேரும்.

✷ **நாலடியார் உணர்த்தும் அறம்**

*"மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது*
*கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்ம்மின்..."*

**விளக்கம் :** செல்வம் உள்ள போது இளமையிலேயே அறம் செய்து பயன்கொள்ள வேண்டும் என்று நாலடியார் கூறுகிறது.

✷ **ஆத்திசூடி உணர்த்தும் அறம்**

*"அறம் செய விரும்பு"*

**விளக்கம் :** ஔவையார் தம் நூலில் 'அறம் செய்வதற்கு ஆசைப்படு' என்று கூறுகிறார்.

**ஈ) அறத்தான் வருவதே இன்பம் :**

அறவழியால் ஒருவர்க்கு வரும் இன்பமே உண்மையான இன்பமாகும். தீயவழியால் வருவன எல்லாம் இன்பம் போல் தோன்றினும் துன்பத்தின் பாற்படுபவனவே ஆகும். அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். 'அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம்' இன்பமும், புகழும் இல்லாதவையே ஆகும்.

***"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்***
***புறத்த புகழும் இல."***

**உ) முடிவுரை**

சங்ககால மக்கள் தங்களுக்கென அறங்களைப் பேணிக் காத்து வந்துள்ளனர். அன்பில் சிறந்தவனாகவும், ஒழுக்கம் நிறைந்தவனாகவும் புகழுக்குரியவனாகவும் இன்சொல்லோடு நன்றியுள்ளவனாகவும் இருக்கவேண்டும் என அறநூல்கள் பல்வேறு அறங்களை வலியுறுத்துகின்றன.

**11. 'விசும்பின் துளியும் பசும்புல் தலையும்' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. [PTA – 3, 6]**

**குறிப்புகள்: முன்னுரை - இயற்கையோடு இயைந்து வாழ்வோம் - வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் - மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் - முடிவுரை.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| அ) முன்னுரை |
| ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்வோம் |
| இ) மழைநீரை சேமிப்போம் |
| ஈ) பாதுகாப்பான குடிநீர் |
| உ) மரம் வளர்ப்போம் |
| ஊ) முடிவுரை |

**அ) முன்னுரை**

சுற்றுச்சூழல் என்பது ஓர் உயிரினத்தைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலைக் குறிக்கிறது. மாறியும் மாறாமல் நிலைத்தும் இருக்கின்ற பலவகைத் தோற்றங்களைக் கொண்டுள்ள இயற்கை, மனித வாழ்க்கையிலிருந்து தவிர்க்க முடியாதது.

**ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்வோம் :**

❋ நம் முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றிப் பிணைந்து வாழ்ந்து உள்ளனர், இயற்கை வளங்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் ஊறு விளைவிக்காமலும் அவற்றைப் பாதுகாக்கும் செயல்களையும் செய்து வந்துள்ளனர். வீட்டு முற்றங்களில் மாட்டுச்சாணி அல்லது மஞ்சள் கரைத்துத் தெளித்து அரிசி மாவினால் கோலமிட்டு எறும்புகளுக்கு உணவு அளித்தனர்.

❋ குழந்தைகள் விளையாட நுங்கு வண்டி, களிமண் பொம்மைகளை அவர்களே உருவாக்கினர். இன்று பெரும்பாலான விளையாட்டுப் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்கும் பாலிதீனால் ஆனவை. முன்பு மிட்டாய்களும், கருப்பட்டிகளும் பனை ஓலைப் பெட்டியில் பொதிந்து தரப்பட்டன.

❋ ஆனால், இன்று நவீனமயமாக்கலாலும், தொழில்துறை வளர்ச்சியாலும் இயற்கையை மறந்து இயற்கை வழங்கும் சேவைகளையும் கருத்தில் கொள்ளாமல் இயற்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் மனிதகுலம் ஈடுபடுகிறது.

**இ) மழைநீரைச் சேமிப்போம் :**

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு."

என்ற குறளுக்கேற்ப நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும். நம் முன்னோர்கள் நமக்கு வெட்டி வைத்த ஏரி, குளம், கண்மாய்களைப் பாதுகாத்தாலே மழைநீரை எளிதாகச் சேமிக்க முடியும். வீடுகள்தோறும் மழைநீர் சேமிப்புத் தொட்டி அமைப்பதைக் கட்டாயமாக்க வேண்டும். மழைநீரைச் சேமிக்க ஏதுவாக நீர்நிலைகளைப் பொது மக்களே அரசை எதிர்பார்க்காமல் சீரமைக்க வேண்டும்.

**ஈ) பாதுகாப்பான குடிநீர் :**

தற்போது உலகில் மூவரில் ஒருவருக்குப் பாதுகாப்பான குடிநீர் உறுதி செய்யப்படவில்லை என ஆய்வு ஒன்று குறிப்பிடுகிறது. நிலத்தடி நீரின் அளவும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவதாகத் தவல்கள் வெளியாகி வருகின்றன. மேலும் 2050ஆம் ஆண்டு உலகம் மிகப்பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும் அதுவும் நீருக்காக என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

**உ) மரம் வளர்ப்போம் :**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்! என்பதற்கிணங்க மரங்கள் நமக்கு மழையைத் தருகிறது. புவி வெப்பமாதலுக்கு முதன்மையான காரணம், பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றம், அவற்றில் முக்கியமாக கார்பன்-டை-ஆக்சைடின் விகிதாச்சார அளவு அதிகரிப்பது. ஒளிச்சேர்க்கை செய்யும் உயிர்களைத்தவிர மற்ற அனைத்தும் கார்பன்-டை-ஆக்சைடை வெளியேற்றுபவையாகவே உள்ளன, அத்தோடு மனிதர்களின் உருவாக்கங்களும் கார்பனை வெளியேற்றுகின்றன. பூமியில் இவை அணைத்திற்கும் எதிராக கார்பன், ஆக்சிஜன் விகிதாச்சாரத்தைச் சமன் செய்யப்போராடுவது மரங்கள் மட்டுமே!

**ஊ) முடிவுரை**

இப்பூமியில் மனித இனம் வாழ முடியும். "காக்கை குருவி எங்கள் ஜாதி; நீர் மலையும் கடலும் எங்கள் கூட்டம்" என்ற பாரதியின் பாடலுக்கேற்ப இயற்கையுடன் இணைந்த வாழ்வை, மனிதன் வாழக் கற்றுக் கொள்ளவேண்டும்.

**12. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி,தலைப்பு ஒன்று தருக.**
**குறிப்புகள்: முன்னுரை - மொழிபெயர்ப்பு நூல்கள் - எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் - மொழிபெயர்ப்பும் கல்வியே - முடிவுரை.** **[PTA –5]**

**தலைப்பு: மொழிபெயர்ப்பு கல்வி**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| அ) முன்னுரை |
| ஆ) மொழிபெயர்ப்பு நூல்கள் |
| இ) சென்றிடுவீர் எட்டுத்திக்கும்! |
| ஈ) மொழிபெயர்ப்பும் கல்வியே |
| உ) முடிவுரை |

**அ) முன்னுரை**

ஒரு குறிப்பிட்ட நாட்டுமொழியின் இலக்கிய வளமையையும், நில தனித்துவங்களையும் வாழ்வியல்களையும் நம் தாய்மொழியில் அறிந்துகொள்வதற்கு உதவுவது மொழிபெயர்ப்பு ஆகும். மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும். ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவதே மொழிபெயர்ப்பு ஆகும். மொழிபெயர்ப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பின்வருமாறு விரிவாகக் காணலாம்.

**ஆ) மொழிபெயர்ப்பு நூல்கள்**

பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும், அவை போன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது. மொழிவேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது.

- தமிழிலிருந்து முதன்முதலாக 1595இல் திருக்குறள் மலையாளத்திற்கு மொழிபெயர்க்கபட்டது.
- வடமொழியிலிருந்து காதம்பரி (15ஆம் நூற்றாண்டு) செய்யுள் நடையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.
- காளிதாசனின் இரகுவம்சம், அரிச்சந்திர புராணம், நைடதம் போன்றனவும் தமிழில் வந்துள்ளன.
- 1730இல் இலத்தீன் மொழியில் வீரமாமுனிவர் திருக்குறளை மொழிபெயர்த்தார்.
- எட்வின் அர்னால்டின் ஆசிய ஜோதி என்ற நூல் கவிமணியால் தழுவி எழுதப்பட்டது.
- லியோ டால்ஸ்டாயின் அன்னா கரீனா, போரும் அமைதியும் முதலிய புதினங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- இராமாயணம், மகாபாரதம் போன்றவை வடமொழியில் இருந்து தழுவி எழுதப்பட்டவையே ஆகும்.

**இ) சென்றிடுவீர் எட்டுத்திக்கும்!**

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும். கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர் என்று பாரதியார் கூறுவதற்கேற்ப, ஒரு மொழி, மற்றொரு மொழியிலிருந்து பெறும் கலைச்செல்வங்கள் அம்மொழியை மேலும் வளமானதாகவும், வனப்பானதாகவும் மாற்றுகிறது. பழம்பெருமையும், பாரம்பரியமும் பேசி தனது மொழியைத்தானே உயர்த்திக்கொண்டு வாழும் "கிணற்றுத்தவளை" வாழ்வை விட்டு வெளியேறி, உலகின் எட்டுத்திக்கும் சுழற்றியடிக்கும் காற்றை, தென்றலை, சுவாசிக்க வெவ்வேறு மொழிகளின் வளர்ச்சியையும் புரிந்துகொண்டு அதனை நமது மொழிக்குள் கொண்டு வருவதும், நமது மொழியின் சிறப்பைப்பிற மொழிகள் அறிந்து கொள்வதற்கான ஒரு பாலம் மொழிபெயர்ப்பே ஆகும்.

***பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்!***

**ஈ) மொழிபெயர்ப்பும் கல்வியே**

மொழிபெயர்ப்பு என்பது தனிக்கலை. அதனை யார் வேண்டுமானாலும் செய்துவிட முடியாது. மொழிபெயர்ப்பாளர் என்பவர் எந்த மொழியுடனும் தனிப்பற்றுக் கொள்ளாமல், நடுநிலையில் நின்று மொழிபெயர்க்க வேண்டும். குறிப்பாக அவருக்கு இரண்டு மொழிகளிலும் அதாவது தருமொழி, பெறுமொழி ஆகிய இரண்டிலும் புலமை இருத்தல் வேண்டும். இரு மொழிகளின் சமூக, பண்பாட்டுச் சூழ்நிலைகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். எனவே, மொழிபெயர்த்தல் என்பதும் ஒரு கல்வியே ஆகும்.

**உ) முடிவுரை**

இன்றைய சூழ்நிலையில் மொழிபெயர்ப்பு என்பது இலக்கியத் துறையிலும் பொதுவான கருத்துப்பரவல் நிலையிலும் மிகவும் அடிப்படையான தேவைகளுள் ஒன்றாக விளங்குகிறது. உலகம் மிகச்சுருங்கி இணையம் போன்ற அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாக 'உலகம் என்பது கிராமம்' என்ற அளவில் சுருங்கிவிட்டது. இந்த நிலையில் பன்னாட்டு மக்களுடன் பழகும் வாய்ப்பு அதிகரித்துள்ளதால், அவரவர் மொழிகளில் உள்ள விழுமியங்களைப் பகிர்ந்து கொள்ளவும், இருதரப்பு உறவினை மேம்படுத்திக் கொள்ளவும், மொழிபெயர்ப்பு இன்றியமையாததாக மாறிவிட்டது.

*********